# இலட்சியக் கொடி ஏந்தி இளம் பிறைகளின் அணிவகுப்பு!

## கலைஞர் கடிதம்!... முதல் பக்கத் தொடர்ச்சி

அதனைக் கண்டித்து அங்கே மக்கள் போராட்டம் நடத்திய போது, 17 முறை துப்பாக்கிப் பிரயோகம் நடைபெற்று, அதிலே நான்கு பேர் களத்திலேயே மாண்டனர். இருபது பேருக்கு மேல் படுகாயமடைந்தனர். 68 பேர் மீது சதி வழக்கு தொடரப்பட்டது. குருதி சிந்திய அந்தக் கொள்கை வீரர்களின் பூமியிலேதான் வருகின்ற டிசம்பர் 15, 16 ஆகிய நாட்களில் இளைஞர் அணியின் மாநில மாநாடு நடைபெறவுள்ளது.

செக்கிழுத்த செம்மல் வ.உ.சிதம்பரனார், ஒருமுறை சிறைபட்டுக் கிடந்ததும் இந்தப் பாளையங்கோட்டை சிறையிலேதான்!

அண்மையில் நூற்றாண்டு விழா கொண்டாடப் பட்டதே, பசும்பொன் தேவர் திருமகன். அவரும் ஒருகாலத்தில் அடைபட்டு இருந்ததும் இந்தப் பாளை சிறைச்சாலையிலேதான்!

இவற்றையன்னியில், நமது பேராசிரியர் அவர்கள் எழுதியுள்ள, "தமிழ்க் கடல் அலை ஓசை" என்ற நூலில் குறிப்பிட்டிருப்பதைப் போல, கடந்த 19ஆம் நூற்றாண்டில் நமது நாட்டிற்கு கிறித்தவ சமயத் தொண்டாற்ற வந்த கால்டுவெல் என்ற பாதிரியார், தமிழகத்தின் தெற்குப் பகுதியில் தங்கி-தமிழைக் கற்றுத் தேர்ந்து, மொழி நூல் ஆராய்ச்சி முறைப்படி, தமிழின் இயல்பினையும் சிறப்பினையும் கண்டறிந்ததோடு, தன்னுடைய 24வது வயதில் அதாவது 1838இல் திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள இடையன்குடி என்ற ஊரில் தங்கி சமயப் பணியில் ஈடுபட்டு - விவிலிய நூலைத் தமிழில் மொழி பெயர்த்த குழுவினருள் ஒருவராகவும் இருந்தார். தமிழின் தனிச் சிறப்புகளை உள்ளங் கொண்டு, அதனை மேலும் ஆராய்ந்து காண்பதற்கு இன்றியமையாத் தென்னாட்டு மொழிகளான - தெலுங்கு, கன்னடம், மலையாளம் - ஆகியவற்றையும் பயின்று, அவைகளிடையே நிலவும் அடிப்படையான ஒற்றுமைகளையும், வடமொழியிலிருந்து அவை அடிப்படையில் வேறுபட்டு நிலவுவதையும் கண்டறிந்து, அவற்றுக்கான சான்றுகளை பல ஆண்டுகள் பாடுபட்டுத் திரட்டி, ஒப்பு நோக்கி ஆய்வு செய்து, பல அரிய முடிவுகளைக் கண்டு "திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்" என்ற இணையற்ற நூலை இயற்றியதும் இந்த நெல்லைச் சீமையிலே தான். தென்னாட்டு மொழிகள் ஒரே மொழி குடும்பத்தைச் சேர்ந்தவை, அவை திராவிட மொழிகள் எனும் பெயர் உடையவை - என்பது கால்டுவெல் அவர்களால் நிலைநாட்டப்பட்டதும், சம்ஸ்கிருதத்திலிருந்து திராவிட மொழிகள் பிரிந்தன என்று கூறுவது முற்றிலும் முரண்பட்டதாகும் என்று திட்ட .வட்டமாக கூறியதும் கால்டுவெல்தான். அவர் வாழ்க்கையில் பெரும் பகுதியை மொழி ஆய்வுக்காக ஈடுபடுத்திக் கொண்டது நெல்லைச் சீமையில் இடையன்குடி வட்டாரத்தில்தான். தமிழை உயிராகப் போற்றி, பல மொழிகளோடும் ஒப்பிட்டு அதன் உயர்வை எடுத்துச் சொல்லிய அந்தத் தகைசால் பெரியவர், தமிழகத்திலே 1891ஆம் ஆண்டு இயற்கை எய்தினார். அவர் உலவி மகிழ்ந்து தமிழ் வளர்த்த தரணியாம் நெல்லைச் சீமையிலே இளைஞர் அணி மாநாடு நடைபெறுகிறது. 24ஆம் வயதிலேயே அவர் கொண்டிருந்த தமிழ் மொழி ஆர்வம்- அவர் நடத்திய மொழி ஆய்வுகள் - எந்த அளவிற்கு இளைஞர்களுக்குத் தேவையான அறிவாற்றல், ஆராய்ச்சி வளர்ச்சிக்கு பயன்பட்டிருக்கிறது என்பதையும், இளைஞராக இருந்தபோதே கால்டுவெல் பயன்படுத்தினார் என்பதையும் விளக்குகின்ற வகையிலேதான், மாநில இளைஞர் அணி மாநாடு நெல்லையிலே நடக்கவிருக்கிறது என்பது, தமிழ் இளைஞர்களைப் பெருமிதம் கொள்ளச் செய்கின்ற ஒரு நிகழ்வாகும்.

அவரைப் போற்றிக் குறிப்பிடும் தமிழ் அறிஞர் ஆர்.பி. சேதுப் பிள்ளை அவர்கள் "நெல்லை நாடு கால்டுவெல்லை தன் மகனாக ஏற்றுக் கொண்டது" என்று குறிப்பிடுகிறார். அத்தகைய தமிழ் மகன் உலவிய பூமி - நெல்லை பூமி. அங்கே தமிழ் இளைஞர்களின் சங்கமம், இது எவ்வளவு பெருமைக்குரியதும், எழுச்சியூட்டக் கூடியதுமான செய்தி.

பாளையங்கோட்டையில்- தந்தை பெரியார் திடலில்- பேரறிஞர் அண்ணா நகரில் - இளைஞர் அணியிலே பொறுப்பேற்றிருந்த புலிப்போத்துகளாக கழகப் பணியாற்றிய மறக்க முடியாத மாவீரர்களாம் என் அன்புத் தம்பிகளின் பெயரில் அமைந்துள்ள அன்பில் பொய்யாமொழி பந்தலில் - கே.கே.கோட்டையப்பன் அரங்கத்தில் -

வே. ரூசோ முன் முகப்பில்- கு.பாலசுப்பிரமணியம் உள் முகப்பில் - இரா. அண்ணாதுரை செல்வன் மேடையில் - து.சொக்கலிங்கம் நுழைவு வாயிலில் - கோட்டை ரபீக் கொடி மேடையில் மாநாடு நடைபெறவுள்ளது.

மாநாட்டுத் தலைவர், இளைஞர் அணியின் செயலாளரும், கழகத்தின் துணை பொதுச் செயலாளருமான தம்பி மு.க.ஸ்டாலின், மாநாட்டிற்கான தேதியை உறுதி செய்து கொண்ட நாளிலிருந்து இன்னும் உறங்கவில்லையாம்! அநேகமாக தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மாவட்டங்களுக்கும் சென்று மாநாட்டிற்கான அழைப்பிதழை அவரே நேரடியாக வழங்கி இளைஞர்கள் மத்தியில் எழுச்சியூட்டி வருகிறார். ஒவ்வொரு மாவட்டத்திலும் கலந்து கொண்ட பிறகு, அதுவரை கலந்து கொண்ட மாவட்டத்தை இந்த மாவட்டம் மிஞ்சி விட்டது என்று சொல்லிய வண்ணம் உள்ளார்.

முதல் நாள் மாநாடு பேரணியோடு தொடங்குகிறது. பேரணியைத் தொடங்கி வைப்பவரும், தொடர்ந்து முன்னிலையேற்று வருபவரும் மத்திய அமைச்சர் தம்பி ராஜா. அன்று மாலையில், அண்மையில் வன்முறை கொடுமைக்கு ஆளான பூண்டி கலைச் செல்வன் பெயரால் அமைந்துள்ள அரங்கில் - தமிழர் தலைவர் அன்பு இளவல் கி. வீரமணி அவர்கள் தலைமையில், நம்முடைய கவிப் பேரரசு வைரமுத்து அவர்கள் முன்னிலையில் - பேராயர் திரு. வின்செண்ட் சின்னதுரை அவர்கள் வழங்கும் "காவியக் கலைஞர் 84" ஒலி ஒளி காட்சியாக வழங்கப்படுகின்றது.

மாநாட்டின் திறப்பாளர் - கடலூர் கழகச் சிங்கம், மறைந்த ஆருயிர் நண்பர் இளம்வழுதி அவர்களின் அருமை மகன், மாணவர் அணியின் செயலாளர், தம்பி இள. புகழேந்தி, எம்.ஏ., பி.எல்.

கழகக் கொடியை ஏற்றவிருப்பவர், கழகத்தின் தளநாயகர்களில் ஒருவராக விளங்கி மறைந்த தம்பி தங்கபாண்டியனின் அன்புச் செல்வி, தமிழச்சி, எம்.ஏ., எம்.பில்.

மொழிப் போர் தியாகிகளின் படத்தை அன்புத் தம்பி, வழக்கறிஞர் அசன் முகமது ஜின்னா, பி.ஏ., பி.எல்., திறந்து வைத்து, தமிழுக்காக நாம் நடத்திய போராட்டங்களையும், புரிந்த தியாகங்களையும் விளக்கவிருக்கிறார்.

**அன்புள்ள,**

**மு.க.**

(முரசொலி 24.11.2007)

---

### மிக்ஜாம் புயல் பாதிப்பு: சோழிங்கநல்லூர் தொகுதி

## செம்மஞ்சேரி பகுதியில் 6,750 குடும்பத்தினருக்கு நிவாரணப் பொருட்கள்!

### அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன் வழங்கினார்! தமிழச்சி தங்கப்பாண்டியன் - அரவிந்த் ரமேஷ் பங்கேற்பு!

சென்னை,டிச.11-

மிக்ஜாம் புயலால் பாதிக்கப்பட்ட சோழிங்கநல்லூர் சட்டப்பேரவை தொகுதிக்கு உட்பட்ட செம்மஞ்சேரி பகுதியைச் சேர்ந்த 6750 குடும்ப மக்களுக்கு தமிழக முதல்வரின் வழிகாட்டுதலின்படி தமிழக சுற்றுச்சூழல் மற்றும் காலநிலைத் துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யாநாதன் ஏற்பாட்டில் பல லட்சம் மதிப்பிலான நிவாரண பொருட்கள் வழங்கட்டது.மீட்பு மற்றும் நிவாரண பணிகளை துரிதமாக மேற்கொண்ட அமைச்சர் மெய்யநாதன் மற்றும் தமிழக முதலமைச்சருக்கு அந்த பகுதி மக்கள் தங்களது நன்றிகளை தெரிவித்துக் கொண்டனர்.

மிக்ஜாம் புயலால் பாதிக்கப்பட்ட சோழிங்கநல்லூர் சட்டப்பேரவை தொகுதிக்கு உட்பட்ட செம்மஞ்சேரி பகுதியில் தமிழக முதல்வரின் வழிகாட்டுதலின்படி தமிழக சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் கடந்த ஐந்து நாட்களாக களப்பணியாற்றி வருகிறார்.

தமிழக சுற்றுச்சூழல் துறை அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதனின் சொந்த தொகுதியான புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடி சட்டப்பேரவை தொகுதிக்கு உட்பட்ட திமுக நிர்வாகிகளும் தன்னார்வலர்களும் இந்த மீட்பு மற்றும் நிவாரண பணிகளில் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

அந்த பகுதியில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களை மீட்டு பாதுகாப்பான இடத்தில் தங்க வைத்ததோடு அவர்களுக்கு தேவையான அத்யாவசிய உதவிகளான உணவு குடிநீர் உள்ளிட்டை அமைச்சர் மெய்யநாதன் தலைமையிலான குழுவினர் வழங்கி வருவதோடு மழை நீரை முழுமையாக அப்புறப்படுத்தி அந்த பகுதி இயல்பு நிலைக்கு திரும்பவும் அமைச்சர் மெய்யநாதன் தலைமையிலான குழுவினர் மும்முரமாக துரிதமாக களப்பணையாற்றியமைக்கு பாராட்டுக்கள் குறைந்து வருகிறது.

இந்நிலையில் செம்மஞ்சேரி பகுதியைச் சேர்ந்த 6750 குடும்ப மக்களுக்கு அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் ஏற்பாட்டில் பல லட்சம் மதிப்பிலான நிவாரண பொருட்கள் இன்று வழங்கப்பட்டது.

குறிப்பாக அப்பகுதி மக்களுக்கு தற்போது தேவைப்படும் அத்தியாவசிய பொருட்கள் அரிசி தண்ணீர் பிரட் பாக்கெட்டுகள் உள்ளிட்ட உணவுப் பொருட்களும் மளிகை பொருட்களும் வழங்கப்பட்டது.

இந்த நிகழ்வில் தென் சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தமிழச்சி தங்கபாண்டியன், சோழிங்கநல்லூர் சட்டமன்ற தொகுதி உறுப்பினர் அரவிந்த் ரமேஷ்,செம்மஞ்சேரி கவுன்சிலர் முருகேசன் உள்ளிட்டோரம் அதேபோல் ஆலங்குடி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட ஒன்றிய கழக செயலாளர் மற்றும் கழக நிர்வாகிகளும் பங்கேற்றனர்.

மிக்ஜாம் புயலால் கடுமையாக பாதிக்கப்பட்ட செம்மஞ்சேரி பகுதியில் களப்பணி ஆற்றிய தமிழக சுற்றுச்சூழல் மற்றும் காலநிலைத் துறை அமைச்சர் மெய்யநாதன் மீட்பு மற்றும் நிவாரண பணிகளில் துரிதமாகவும் அக்கறையோடும் செயல்பட்டு அந்தப் பகுதியை இயல்பு நிலைக்கு கொண்டு வந்ததற்கு அந்த பகுதி பொதுமக்கள் அமைச்சர் மெய்யநாதனுக்கும் தமிழக முதல்வருக்கும் நன்றிகளை தெரிவித்துக் கொண்டனர்.



புயலால் பாதிக்கப்பட்ட சென்னை மாநகராட்சி 185வது வார்டுக்கு உட்பட்ட உள்ளகரம் பகுதி மக்களுக்கு நிவாரணப் பொருட்களை அமைச்சர் மா சுப்பிரமணியன் முன்னிலையில் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை அமைச்சரும், தூத்துக்குடி வடக்கு மாவட்ட செயலாளருமான பி. கீதா ஜீவன் வழங்கினார். உடன் தென்சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தமிழச்சி தங்கபாண்டியன்,சட்டமன்ற உறுப்பினர்கள் அரவிந்த் ரமேஷ், மார்க்கண்டேயன்,மாமன்ற உறுப்பினர் சர்மிளா தேவி,வட்டக் கழக செயலாளர்கள் திவாகர்,மணிகண்டன் மற்றும் தூத்துக்குடி மாநகர திமுக செயலாளர் ஆனந்தசேகரன்உள்ளிட்ட கழக நிர்வாகிகள் மற்றும் கோவில்பட்டி நகர மன்ற தலைவர் கா.கருணாநிதி ஆகியோர் உள்ளனர்.

---

### கழக மீனவர் அணி துணைத் தலைவர் கே.பி.சங்கர் எம்.எல்.ஏ. தலைமையில்

## திருவொற்றியூர் 6-வது வட்டத்தில் 1000 பேருக்கு அத்தியாவசியப் பொருட்கள்!

### அமைச்சர்கள் எஸ்.எஸ்.சிவசங்கர் - மதிவேந்தன் வழங்கினர்!

### கே.ஆர்.என்.ராஜேஷ்குமார் எம்.பி. - பெ.ராமலிங்கம் எம்.எல்.ஏ. பங்கேற்பு!

சென்னை, டிச. 11 -

மிக்ஜாம் புயல் காரணமாக மிகவும் பாதிக்கப்பட்ட திருவொற்றியூர் சட்டமன்ற தொகுதி 6 வது வட்டத்தில் உள்ள காட்டு பொன்னியம்மன் மேடு, சிவசக்தி நகர் ஆகிய பகுதியில் வசிக்கும் 1000 பொது மக்களுக்கு கழக மாநில மீனவர் அணி துணைத் தலைவர் திருவொற்றியூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் கே.பி.சங்கர் தலைமையில் மீட்பு பணிகளை துரிதப்படுத்தவும், நிவாரணப் பணிகளை மேற்கொள்ளவும் சிறப்பு பொறுப்பாளர்களாக நியமிக்கப்பட்டுள்ள போக்குவரத்து துறை அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர், வனத்துறை அமைச்சர் மா.மதிவேந்தன், நாமக்கல் மாவட்ட கழக செயலாளர் - மாநிலங்களவை உறுப்பினர் கே.ஆர்.என்.ராஜேஷ்குமார், நாமக்கல் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் பெ.ராமலிங்கம் ஆகியோர் மக்களுக்குத் தேவையான அரிசி, இருவகை பருப்பு, எண்ணை, மளிகைப் பொருட்கள் குடிநீர், பிரட், பெட்ஷீட் போன்ற அத்தியாவசியப் பொருட்களை வழங்கினர்.

இதில் திருவொற்றியூர் மேற்கு பகுதி கழக செயலாளர் வை.ம.அருள்தாசன், 6 வது வட்டக் கழக செயலாளர் கி.கண்ணன், 6வது வார்டு மாமன்ற உறுப்பினர் சாமுவேல் திரவியம், 5 வது வட்ட மாமன்ற உறுப்பினர் கே.பி.சொக்கலிங்கம், மாவட்ட பிரதிநிதிகள் ஆர். தனேஷ்குமார், எஸ்,மகேந்திரன், மலைராஜ், மாவட்ட அயலக அணி துணை செயலாளர் எம்.கார்த்திக், தொண்டரணி அமைப்பாளர் மோகனசுந்தரம் உள்ளிட்ட நிர்வாகிகள் கழகத் தோழர்கள், பொதுமக்கள் கள் கலந்து கொண்டனர்.



மிக்ஜாம் புயல் காரணமாக மிகவும் பாதிக்கப்பட்ட திருவொற்றியூர் சட்டமன்ற தொகுதி 6 வது வட்டத்தில் உள்ள காட்டு பொன்னியம்மன் மேடு, சிவசக்தி நகர் ஆகிய பகுதியில் வசிக்கும் 1000 பொதுமக்களுக்கு கழக மாநில மீனவர் அணி துணைத் தலைவர் திருவொற்றியூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் கே.பி.சங்கர் தலைமையில் மீட்பு பணிகளை துரிதப்படுத்தவும், நிவாரணப் பணிகளை மேற்கொள்ளவும் சிறப்பு பொறுப்பாளர்களாக நியமிக்கப்பட்டுள்ள போக்குவரத்து துறை அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர், வனத்துறை அமைச்சர் மதிவேந்தன், நாமக்கல் கிழக்கு மாவட்ட கழக செயலாளர் மாநிலங்களவை உறுப்பினர் கே.என்.ராஜேஷ் குமார், நாமக்கல் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் பெ.ராமலிங்கம் ஆகியோர் மக்களுக்கு தேவையான அரிசி, இருவகை பருப்பு, என்னை, மள்ளிகைப் பொருட்கள் குடிநீர், பிரட், பெட்ஷீட் போன்ற அத்தியாவசிய பொருட்களை வழங்கினர். உடன் வை.ம.அருள்தாசன், கி.கண்ணன், சாமுவேல் திரவியம் எம்.சி., கே.பி.சொக்கலிங்கம் எம்.சி., ஆர்.தனேஷ்குமார், எஸ்,மகேந்திரன், மலைராஜ், மாவட்ட அயலக அணி துணை செயலாளர் எம்.கார்த்திக், தொண்டரணி அமைப்பாளர் மோகனசுந்தரம் உள்ளிட்ட நிர்வாகிகள் கழகத் தோழர்கள் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

---

### காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட

## தி.மு.க. செயற்குழுக் கூட்டம்!

### மாவட்டச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. அறிவிப்பு!



காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட தி.முக. செயற்குழுக் கூட்டம், வருகிற 16.12.2023 சனிக்கிழமை காலை 10.00 மணியளவில் காஞ்சிபுரம் கலைஞர் பவள விழா மாளிகையில் மாவட்ட கழக அவைத்தலைவர் ச.இனியரசு, அவர்கள் தலைமையிலும் மாவட்ட துணை செயலாளர்கள் க.செல்வம் எம்.பி., டி.வி.கோகுலகண்ணன், கு.மலர்விழி, மாவட்டப் பொருளாளர் சன்பிராண்ட் கே.ஆறுமுகம் ஆகியோர் முன்னிலை யிலும் நடைபெற உள்ளது.

எனவே, இக்கூட்டத்தில் சட்ட மன்ற உறுப்பினர் தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாநகர நகர ஒன்றிய பகுதி பேரூர் செயலாளர்கள், மாநில, மாவட்ட, கழக அணிகளின் நிர்வாகிகள் மற்றும் சிறப்பு அழைப்பாளர்கள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

பொருள். 1. 24.12.2023 அன்று சேலத்தில் நடைபெறும் தி.மு.க இளைஞர் அணி இரண்டாவது மாநில மாநாட்டில் கலந்துக்கொள்வது சம்பந்தமாக.

2. கழக ஆக்கப்பணிகள்.

**க.சுந்தர், எம்.எல்.ஏ.**
செயலாளர்
காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட தி.மு.க.



எழும்பூர் தொகுதி, 108வது வட்டம், தாஸ்புரத்தைச் சேர்ந்த வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட 200 குடும்பங்களுக்கு எழும்பூர் சட்டமன்ற உறுப்பினர் வழக்கறிஞர் இ.பரந்தாமன் நிவாரண உதவிகளை வழங்கினார்.



தமிழ்நாடு மாற்றுத்திறனாளிகள் முன்னேற்ற சங்கம் சார்பாக, அதன் மாநிலத் தலைவரும், தமிழ்நாடு அரசு மாற்றுத்திறனாளிகள் நலவாரிய உறுப்பினர் ரெ.தங்கம், மிக்ஜாம் கன மழையால் பல்வேறு பகுதிகளில் பாதிக்கப்பட்ட 100க்கு மேற்பட்ட மாற்றுத்திறனாளிகள் குடும்பங்களுக்கு அரிசி, மளிகை பொருட்களை வழங்கினார். மாநில பொருளாளர் டாக்டர் எஸ்.நசீம், சென்னை தென்மேற்கு மாவட்ட தி.மு.க மகளிர் அணி துணை அமைப்பாளர் திருமதி சரிதா தங்கம், சங்க மக்கள் தொடர்பு அலுவலர் பா.சக்திவேல்,தென் சென்னை மாவட்ட சங்க செயலாளர் ஆர்.சீனிவாசன்,செயற்குழு உறுப்பினர் என்.ரவிச்சந்திரன் உடன் உள்ளனர்.